REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 6உ செவ்வாய் (21—12—54) ★ ★ வெளியூர்: மார்கழி 7உ புதன் (22—12—54) [இதழ் 163

'நல்ல நாளில்' 51 பேர் மரணம்!

வாஷிங்டன், டிச. 20—

"பத்திரமாக கார் ஓட்டிச்செல்லும் நாள்," என்று சென்ற புதன்கிழமை அமெரிக்கா முழுமையும் ஒரு நாள் கொண்டாடப் பட்டது.

அமெரிக்காவில் தினந்தோறும் நடைபெறும் ஏராளமான விபத்துக்களைத் தவிர்க்கவே இம்மாதிரி ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நல்ல நாளில் 3,935 போக்குவரத்து விபத்துகள் ஏற்பட்டு 966 பேர் காயமுற்றார்களாம்; அது மட்டுமல்ல—அந்த விபத்துக்களில் சிக்கி மாண்டு போனவர்கள் 51 பேர்!

இதுபற்றிச் சொல்லும்போது அமெரிக்க அதிகாரியான எச். பி. மில்லர், 'நல்ல நாள்' கொண்டாடியதில் பிரமாத வெற்றி கிடைத்ததாகக் கூறினாராம்.

மதுரை விசாரணைக்கு உயர் அதிகாரிகளை அனுப்பியதேன்?

அரசாங்கத்தின் போக்கு புரியாத புதிர்!

சட்டசபையில் பி. டி. ராஜன் வினா

சென்னை, டிச. 20—

"மதுரையில் நடந்த சம்பவங்களைக் குறித்து விசாரணை செய்ய சர்க்கார் பெரிய கவலை எடுத்துக்கொண்டு, இரண்டு முக்கியமான அதிகாரிகளான போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலையும், ரெவின்யூ போர்டின் உயர்தர அதிகாரியையும் அனுப்பி வைத்தனர்; சர்க்காரின் இந்த நடவடிக்கைக்கு அவசியமோ காரணமோ இருப்பதாக எனக்குத் தெரியவில்லை; எது சரியென்று தெரிகிறதோ, அதைச் செய்ய உள்ளூரில் உள்ள அதிகாரிகளை சர்க்கார் நம்ப வேண்டும்; அந்த உள்ளூர் அதிகாரிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக புகார்கள் வரும்போது மட்டும்தான் சர்க்கார் உயர்தர அதிகாரிகளை அனுப்பி விசாரணை செய்யச் சொல்லலாம்,"

—என்று திரு பி. டி. ராஜன், எம். எல். ஏ., சட்டசபையில் நாடக மசோதா விவாதத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இன்னும் தயாராகவில்லை

சென்னை, டிச. 20—

இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்காக சிபாரிசு செய்யப்படவேண்டிய வேலைத் திட்டங்களின் பட்டியல் இன்னமும் தயாராகவில்லை என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் அறிவித்திருக்கிறார்.

சபைக்கு சந்தர்ப்பம்

சென்னை சர்க்கார் சிபாரிசு செய்யும் திட்டங்களைப் பற்றி விவாதிக்க சட்ட சபைக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமெனவும், அதன் பின்னரே பட்டியல் இறுதியாகத் தயாரிக்கப்பட்டு இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்படுமெனவும் மந்திரியார் கூறியிருக்கிறார்.

நடப்பு ஆண்டில், உருளைக் கிழங்கு சாகுபடி விஸ்தீரணம் 6,48,000 ஏகராவும், உற்பத்தி 19,65,000 டன்னுமாக இருக்குமென்று தெரியவருகிறது.

நெய்வேலி நிலக்கரி மீது மைசூர் சர்க்கார் கண்ணோட்டம்

சேலம் இரும்புக்கனிகள் பற்றி சென்னை சர்க்கார் — ரஷ்ய நிபுணர்கள் ஆலோசனை

சென்னை, டிச. 20—

நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரியையும், சேலத்தில் கிடைக்கும் இரும்பையும் பயன்படுத்தி, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க இயலுமா என்று இந்தியா வந்திருக்கும் ரஷ்ய நிபுணர்கள் சென்னைசர்க்காருடன் கலந்து பேசினார்கள்.

சென்னை சர்க்கார், தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி வற்புறுத்தினார்கள் என்று தெரிகிறது.

சென்னை முதல் அமைச்சர் காமராசர், அமைச்சர் பக்தவத்சலம் ஆகியோரும், சர்க்கார் உயர்தர அதிகாரிகளும் ரஷ்ய நிபுணர்களுடன் கலந்து பேசினார்கள்.

ரஷ்ய நிபுணர்கள் மற்ற பகுதிகளிலும் சுற்றுப்பயணம் செய்த பின்னர் இந்தியாவில் இரும்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டியது பற்றி தங்கள் அறிக்கையை இந்திய சர்க்காருக்குத் தருவர் என்று தெரிகிறது.

"நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி, சாந்தூர் மலைப்பகுதிகளில் கிடைக்கும் இரும்பு இவைகளைப் பயன்படுத்தி, பெல்லாரி மாவட்டத்தில் இரும்புத் தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம்,"

என்று மைசூர் சர்க்கார் ரஷ்ய நிபுணர்களிடம் அளித்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

ரஷ்யா அச்சுறுத்தல்!

மாஸ்கோ, டிச. 20—

"மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் பாரிஸ் ஒப்பந்தங்களை உறுதி செய்தால் இங்கிலாந்து—சோவியத் ரஷ்யா ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்,"

என்று அச்சுறுத்தும் குறிப்பொன்றை சோவியத் சர்க்கார் பிரிட்டனுக்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிகிறது.

சில நாட்களுக்கு முன் இதையொத்த குறிப்பொன்றை ரஷ்யா பிரான்சுக்குத் தந்ததும் நினைவிலிருக்கலாம்.

இந்திய சர்க்கார், நடப்பு நிதி ஆண்டில், நவம்பர் மாதம் வரை கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்காகப் பல்வேறு மாநிலங்களுக்கு, மானியமாகவும், கடனுதவியாகவும் அனுமதித்திருக்கும் தொகை மொத்தம் 2½ கோடி ரூபாயாகும்.

மார்ஷல் டிட்டோ சென்னை வருவார்

சென்னை, டிச. 20—

யூகோ நாட்டின் தலைவரான மார்ஷல் டிட்டோ தனது பர்மா சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பும்போது சென்னை நகருக்கு வருவார் என்று தெரிகிறது.

ஜனவரி 17-20 தேதிக்குள் அவர் சென்னை வருவார் என்றும், இதுபற்றி ஆராய்ந்து ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு சர்க்கார் உதவிக் காரியதரிசி இராணுவத் தலைவர்கள், போலீஸ் அதிகாரிகள் ஆகியோர் கூடிப் பேசினார்கள் என்றும் தெரிகிறது.

★

மக்களை அடக்கி வைத்திருக்கவே 'இராமாயணம்' பயன்படும்

மசோதா சட்டமானால் மத மாற்றம் கூடுதலாகும்

"இந்த நாடக மசோதாவை பரிசிலனை செய்ய நியமிக்கப்பட்ட பொறுக்குக் குழுவிலிருந்த எதிர்க் கட்சி அங்கத்தினர்கள், மசோதாவினை எதிர்த்திருக்கிறார்கள்."

"எண்ணற்ற கல்வியறிவில்லாத ஏழை மக்களை அடக்கி வைப்பதற்கு 'இராமாயண'த்தையும், 'மகாபாரத'த்தையும் உபயோகித்துக் கொள்கிற சுயநலத்தைப் பாதுகாக்கவே இந்த நாடகத் தடைச் சட்டம் பயன்படும்."

"இந்தச் சட்டம் இவ்வளவு அவசரமாக இப்போது கொண்டுவரப்படத் தேவையில்லை; ஏற்கனவே உள்ள சட்டமே சர்க்காருக்குப் போதுமானதாகும்.

"இந்தச் சட்டத்தினால் மக்கள் தங்கள் மதத்தை மாற்றிக் கொள்ளுமாறு வெகு துரிதமாகத் துரத்தப்படுவர்."

—என்று, தோழர் ஏ. ரத்தினம் சட்டசபையில் நாடக மசோதா மீது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

'அறிவு மறையும் இடத்தில் மதம் உருவெடுக்கிறது'

'ஒருவனின் மத உணர்வை அளக்கச் சிறந்த கருவி இல்லை'

"இந்திய அரசியல் சட்டத்தின் 25-ம் பிரிவு மக்கள் எல்லோரும் தங்கள் நம்பிக்கைக்குகந்த மதத்தைப் பின்பற்றவும், பரப்பவுமான அடிப்படை உரிமை ஒன்றைத் தந்துள்ளது."

"மத சம்பந்தமான நிறுவனங்களின் சொத்துக்களைப் பராமரிக்கவும், நிர்வகிக்கவுமான அதிகாரம் மட்டும்தான் மாநில அரசாங்கங்களுக்கு தரப்பட்டுள்ளது."

"ஆனால், சர்க்காரின் மதக்கொள்கையும், மதநம்பிக்கையும் வேறுபட்ட ஒன்றாகத் தெரிகிறது."

"மதத்தைப் பற்றி காரண காரியங்களுடன் விவாதிக்க சர்க்காரால் இயலாது; ஏனெனில் சுவாமி விவேகானந்தரே கூறியிருக்கிறார்—'அறிவு மறைகிற இடத்தில்தான் மதம் பிறக்கிறது' என்று!"

"ஒரு மனிதன் ஒரு நிகழ்ச்சியைக் காணும்போது அவனுடைய மத உணர்வை அளவிட அவர்களிடம் கருவிகளேதும் கிடையாது."

"கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதைப்போன்றே மத நம்பிக்கையும், மத அவநம்பிக்கையும் மிகப் பழமையான ஒன்றாகும்."

"பகுத்தறிவு கூட மிகப் பழங்காலந்தொட்டே வேர்விட்டு வளர்ந்துள்ளது."

"சர்க்கார் பாதுகாக்க விரும்புகிற மதக் கொள்கை இதுதான்; இவைதான் மத உணர்வுகள்' என்பனவற்றைத் திட்டவட்டமாகத் தெளிவாக எடுத்துக்காட்டாவிட்டால், இன்னல் பலவற்றிற்கு சர்க்கார் தங்களைத் தாங்களே ஆளாக்கிக் கொள்வர்."

"இதற்கான விளக்கங்கள் நாடக மசோதாவில் இல்லை," என்று மலபார் ம. சோ. கட்சியைச் சேர்ந்த நாராயண குருப் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

காங்கிரஸ் கட்சியினருக்கு பதவி பெறும் வாய்ப்பு!

200 பதவிக்கு 800 நபர் போட்டி!

சென்னை, டிச. 20—

200 கிராம சேவையாளர்களை நியமிக்க சென்னை காங்கிரஸ் அரசாங்கம் முன்வந்திருக்கிறது. அவர்களைப் பெரும்பாலும், சமூக நலத் திட்டப் பகுதிகளிலும், தேசிய விஸ்தரிப்பு திட்டப் பகுதிகளிலும் பணிபுரிய அமர்த்துவது என்பது அரசாங்கத்தின் எண்ணமாகும்.

இப்பதவிகளுக்கு ஏறத் தாழ 800 நபர்கள் மனுச் செய்துக் கொண்டிருப்பதாகக் கூறலாம். இவர்களில் 100 நபர்களை, சென்னை அரசாங்க அலுவலகத்தில் தொடர்புடைய அதிகாரிகள் இன்று நேரில் கண்டு பரிட்சித்துள்ளனர்.

★

15 நாட்களாக போலீசிடம் சிக்காத வீரமுத்து!

மதுரை முதல் வகுப்புமாஜிஸ்திரேட் முன் தஞ்சம்!

மதுரை, டிச. 20—

'இராமாயணம்' நடைபெற்ற பழனி டாக்கீசுக்கு எதிரில் இம்மாதம் 2-ந் தேதி கலகம் செய்ததாக மதுரை போலீசார், விபூதி வீரமுத்து உள்ளிட்ட 40 நபர்கள் மீது போலீசார் வழக்குத் தொடுத்துள்ளனர்.

அவ்வழக்குச் சம்பந்தமாக கடந்த பதினைந்து நாட்களாக, விபூதி வீரமுத்துவை போலீஸ் தேடிவந்தது.

இறுதியாக வீரமுத்துவே மதுரை முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் முன் இன்று தஞ்சம் அடைந்தது. ரூ. 500 மதிப்புக்கு இரண்டு நபர் ஜாமீன் கொடுத்தும், அதே தொகைக்கு சொந்த ஜாமீன் கொடுத்தும் வீரமுத்து வெளிவந்திருக்கிறது. (ந. நி.)

சம்பளம் வாங்கமாட்டோம்!

தபால் இலாகா ஊழியர் முடிவு!

ஐதராபாத் மாநிலத்தில் சில பகுதிகளில் ஊழியருக்கு தரப்பட்டு வந்த வீட்டு வாடகைப் படியை சர்க்கார் ரத்து செய்ததை எதிர்த்து, வரும் ஜனவரி மாதம் முதல் தேதியன்று சம்பளம் வாங்கிக் கொள்வதில்லையென ஐதராபாத் தபால், தந்தி ஊழியர் சங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

திருமல்சேரி, பொலாரம், பீகம்பேட்டை, லாலாகுடி, ஜமைஉஸ் மானியா முதலிய ஊர்களில் உள்ள தபால், தந்தி இலாகா ஊழியர்களுக்குத்தான் தரப்பட்டு வந்த வீட்டு வாடகைப்படி ரத்து செய்யப்பட்டதாம்.

பெங்களூர் மாநாடுகள் ஜன. 1, 2-ல்!

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 21—12—1954 செவ்வாய்

இதுவும் மதஉணர்வுதான்?

"ஒரு சமண மத குரு நிர்வாண கோலத்துடன் பம்பாய் நகரின் முக்கிய வீதிகள் வழியாய் ஊர்வலமாய் அழைத்துச் செல்லப்பட்டார்;

"நிர்வாண கோலத்தில் அவரைச் தரிசிக்க, நகரின் தெருக்களில் இருமருங்கிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் ஆணும் பெண்ணுமாகக் கூடி இருந்தனர்;

"மத குரு நிர்வாணமாகவே இருந்தபோதிலும், நிர்வாண கோலத்தில் மக்கள் அவரைப் பார்க்க முடியாதவாறு அவரைச் சுற்றி திரையிடப்பட்டிருந்தது;

"மத குருவின் நிர்வாண ஊர்வலத்திற்கு அனுமதி கோரியபோது, 'மதகுருவை திரையிட்டு ஊர்வலத்தை நடத்தலாம்' என்ற நிபந்தனையுடன் பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் அனுமதி தந்தார்."

இப்படி ஒரு செய்தி அண்மையில் வெளிவந்தது.

சமண மத குரு, நிர்வாண கோலத்தில், மத நம்பிக்கை கொண்ட மக்களுக்குக் காட்சி தர விரும்புகிறார்; ஊர்வலமும் நடைபெறுகிறது, மத நம்பிக்கை கொண்ட மக்களும் ஆயிரமாயிரமாகக் கூடி, மணிக்கணக்கில்காத்திருந்து, இடித்து மிதித்துக்கொண்டேனும் மத குருவை அவரது பிறந்தமேனி கோலத்தில் கண்டானந்தித்து, 'ஜன்மச் சாபல்யம்' பெற்று, போகிற 'பூமி'க்குப் 'புண்ணியம்' தேடிக்கொள்ள ஆசைப் படுகிறார்கள்!

சென்ற ஆண்டில் நடைபெற்ற 'கும்பமேளா' திருவிழாவில், இந்து மதச் சாமியார்கள் பலர்—ஆண்களும், பெண்களும்தான் — வீதி வழியே பிறந்த மேனியில் ஊர்வலம் வருவதைக் காண நாட்டின் நாயகர்கள் உட்பட நாற்பது லட்சம் மக்கள் கூடியதும், அந்தக் கூட்டம் தன்னுள் ஒரு பகுதியை மிதித்துக் குழம்பாக்கி, 400-க்கும் அதிகமான உயிர்களைக் குடித்ததும் நாடும், நாமும் நன்கறிந்த சோக நிகழ்ச்சிகள்தான்.

இந்து மதப் பாதுகாவலர்கள், இவற்றிற்கெல்லாம் காரணமாக, 'எல்லாம் அவன் செயல்' என்ற வழக்கமான பல்லவியைத்தான் ஒப்பித்தனரே தவிர, அறிவுபூர்வமான சமாதானம் எதையும் இதுவரையில் சொன்னதில்லை.

'வேதவிற்பன்னர்' 'கீழ்திசை நாட்டுத் தத்துவஞானி,' என்றெல்லாம் புகழப்படும் இந்தியத் துணைக்கண்டத்து உதவி ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களாவது, 'ஆணுக்கு நிகர் பெண்' என்பதற்கொப்ப இருசாராரும் பிறந்த மேனிகளோடு காட்சி தருவது குறித்தும், அந்தக் காட்சியைக் காணக் கூடியிருந்த மத நம்பிக்கை கொண்ட லட்சக்கணக்கான மக்களுக்கு அவர்களின் 'மாயமான வாழ்வு 'கடைத்தேற' இந்த நிர்வாணகோலக் காட்சி எவ்வாறு வழிகாட்டும் என்பது குறித்தும், சாமியார்களின் பிறந்தமேனிக் கோலத்தை 'நெருங்'கிக் காண முயற்சிக்கையில், நூற்றுக் கணக்கான மக்கள் பெருங்கூட்டத்தால் மிதியுண்டு 'மோட்ச லோகம்' அடைந்தது குறித்தும், இந்து மதத் தத்துவ ரீதியாக, இனிமேலாவது விளக்கம் தருவாரோ, என்னவோநாமறியோம்!

கொடுமைகளும், ஆபாசங்களும் மதத்தின் பெயரால்—மதப் பாதுகாவலர்களால் நாடெங்கும் நடத்தப்படுகின்றன.

மத நம்பிக்கைதான் மக்களின் அறிவு, உழைப்பு இரண்டையும் சுரண்டிச் செல்லும் கருவியாக, எந்த மதத்திலும், ஒரு கூட்டத்தவரால்—அவர்களின் பகட்டான வாழ்விற்குப் பயன்படுத்தப்படுகிறது!

அப்படிப்பட்ட மதங்களைப் பரப்புவோர்தான், மக்களுக்கு நிர்வாணமாகக் காட்சி தருகிறார்கள்—மத நம்பிக்கை கொண்ட மக்களும் தங்கள் அறிவை மறந்து, தாங்களும் மனிதர்கள் என்ற நினைப்பையும் துறந்து, உழைப்பையும் இழந்து அக்காட்சியைக் காணுகிறார்கள்.

மதகுரு—அவன், பிறந்த மேனியோடு வீதி வழியே ஊர்வலம் வர விரும்புகிறான்; அதற்கு மதம் அனுமதி தருகிறது.

மக்கள்—அந்த ஆபாச அலங்கோலக் காட்சியைக் காண விழைகிறார்கள்; அதற்கு 'எங்கே சொர்க்கம்?' எனும் அறிவு விளக்கம் பெறாத அவர்களின் பண்படாத உள்ளம் அனுமதி தருகிறது; 'மத உணர்வு' அவர்களைத் தூண்டுகிறது.

அரசாங்கம்—மக்களின் மடமை நீடிப்பதில், சுயநலத்தோடு கூடிய அக்கறை காட்டிவரும் காங்கிரஸ் அரசாங்கம்—நிர்வாண ஊர்வலத்திற்கு அனுமதி தருகிறது—'மக்களின் மதஉணர்வு புண்படக் கூடாது' என்று கருதுவதால் போலும்!

இத்தகைய ஆபாசங்களை உள்ளடக்கிக்கொண்டுள்ள இந்த 'மத உணர்வை'த்தான் புண்படுத்தக் கூடாதெனவும், அந்த உணர்வு நாட்டில் இருக்கத்தான் வேண்டுமெனவும் 'இந்து'வும், 'மித்திர'னும் அவர்களது பந்துமித்திரர்களும், எடுபிடிகள், கூடிக் குடி கெடுக்கும் கெடுமதியாளர்கள் ஆகியவர்களின் துணையுடன் தங்கள் ஆற்றல் முழுவதையும் திரட்டி ஒருமுகமாய்க் கூச்சலிடுகின்றனர்.

இந்தக் கொடுமைகளுக்கெல்லாம், 'மக்களின் மத உணர்வு புண்படக்கூடாது' என்ற போர்வை பயன்படுகிறது.

இந்த ஆபாசங்களை, மனிதப் பண்பைக் குப்பைத்தொட்டிப் பொருளாக்கும் இந்தக் கேவல நிகழ்ச்சிகளை, அறிவுலகம் கைகொட்டி எள்ளி நகையாடும் இந்த நடமாடும் நாசங்களை, நாடகம் ஒன்றில் எடுத்துக் கூறினல், 'அது மத நம்பிக்கை கொண்ட மக்களின் மனம் புண்படும்,' என்று கூறி, நாடகத்தைத் தடுத்தி நிறுத்தி விட உதவும் அதிகாரத்தைப் பெற சென்னை போன்ற மாநில ஆட்சியாளர்கள் மசோதா தயாரிக்கிறார்கள்.

'நிர்வாண ஊர்வலங்கள், கும்பமேளா கொடுமைகள் நாட்டிலே நடைபெறத்தான் செய்யும்; அதை யாரும் எடுத்துக் காட்டக் கூடாது; அவ்வாறு எடுத்துக் காட்டுவது மக்களின் மத உணர்வைப் புண்படுத்துவதாகும்,' என்று கூறப்படுமானல், 'ஐயோ, மத உணர்வே, நீ வாழி! அந்த மதப் போர்வையில் மக்களின் அறிவைப் பறித்து, வாழ்வைச் சுரண்டிக் கொழுக்கும் கூட்டமே நீ வாழி!" என்று பகுத்தறிவு உலகம் கூறிவிட்டு, கை கட்டி வாய் பொத்தி நிற்காது; இதுவரை அப்படி நின்றதுமில்லை. எதிர்காலமும் பகுத்தறிவு உலகின் பக்கம்தான்!

எல்லாம் முதல் தடவை

இந்தியாவுக்கு வந்துள்ள வெளிநாட்டு மக்களில், மார்ஷல் டிட்டோதான், முதல் தடவையாக சுதந்திர இந்தியாவுக்கு வரும் ஒரு வெளிநாட்டின் தலைவர்.

மார்ஷல் டிட்டோவுக்குத் தான் இந்திய ஜனாதிபதியின் கொடி முதல் தடவையாக தலைவணங்கியது!

மார்ஷல் டிட்டோவுக்கும், அவரது குழுவினருக்கும், இந்திய சர்க்கார், மதுவிலக்கு சட்டங்களிலிருந்து விலக்கு அளித்துள்ளார்கள். 'அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் மதுவகைகளை வாங்கலாம்; ஏற்றுமதி செய்யலாம்; இறக்குமதி செய்யலாம்; குடிக்கலாம்,' என்று விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. சுதந்திர இந்தியாவில் இப்படிச் செய்வது இதுவே முதல் தடவை.

ஒரு கம்யூனிச நாட்டின் தலைவர் கம்யூனிச நாடல்லாத மற்றொரு நாட்டிற்குச் செல்வது இதுதான் முதல்தடவை!

சென்ற ஒரு நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்துள்ள ஒரே ஒரு வெளிநாட்டு சர்க்காரின் ஜனாதிபதி மார்ஷல் டிட்டோதான்!

தன்னையே தண்டித்துக் கொண்ட

ஜெனரல் திம்மையா!

ஜெனரல் திம்மையா, விடுமுறையில் மெர்க்காராவுக்கு வந்துள்ளார். அவர் கூட்டம் ஒன்றில் நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்துகையில், ஒரு மணி நேரம் ஆனதும் பத்து நிமிடங்கள் ஓய்வு எடுத்துக் கொண்டாராம். அந்த பத்து நிமிடத்திற்குள் ஒரு 'சிகரெட்' புகைத்திருக்கிறார்.

'பொது மண்டபங்களுக்குள் புகை பிடித்தலாகாது,' என ஒரு சட்டமிருப்பதாக பத்திரிகையாளர் அவருக்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

உடனே அவர், தனக்குத் தானே ரூ. 5 அபராதம் விதித்துக் கொண்டு, அபராதத் தொகையை ஒரு கடிதத்துடன் குடகு சட்ட மந்திரிக்கு அனுப்பி வைத்திருக்கிறார். சட்ட மந்திரி கே. மல்லப்பாவும் அவற்றைப் பெற்றுக் கொண்டு, 'திம்மையாவின் செய்கை இளைஞர்களுக்கு ஒரு நல்ல பாடமாகும்,' என்று கூறியதுடன், அந்த ஐந்து ரூபாயையும், குடகு குழந்தைகள் நிதிக்கு அனுப்பி வைத்தாராம்!

மத்திய புனர்வாழ்விப்பு மந்திரி காரியாலயம், 1954—55-ம் ஆண்டில் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்தும், மேற்கு பாகிஸ்தானிலிருந்தும் வந்துள்ள இடம் பெயர்ந்தவர்களுக்குக் கடனுதவியாக மொத்தம் ரூ. 13·24 கோடி வழங்கியிருக்கிறது.

புத்த சந்நியாசிகள் ஆர்ப்பாட்டம்!

முன்னாள் மந்திரியைக் கைது செய்ததற்கு எதிர் நடவடிக்கை!

ரங்கூன், டிச. 18—

பர்மிய அரசாங்க மந்திரியாயிருந்த யூ-பா-பே என்பவரைக் கைது செய்ததற்கு எதிர்ப்புக் காட்டும் வகையில் நூற்றுக் கணக்கான பர்மிய புத்த மத சந்நியாசிகள் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தினதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

யூ-பா-பே இப்போது தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணைக்காகக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜெனரல் நீ-வின் என்ற இராணுவ அதிகாரியை, யூ-பா-பே மூன்றாண்டுகளுக்கு முன் அணுகி அரசாங்கத்தைக் கவிழ்க்கும் தனது சதிக்கு உடன்படுமாறு கேட்டதாக, பிரதமர் யூ-நூ கடந்த அக்டோபரில் பத்திரிகை நிருபர்களிடை கூறியிருப்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

* * *

சதியில் ஈடுபட்டவர்கள் வரலாறு

இராணுவத்தின் உதவியுடன் சர்க்காரைக் கவிழ்க்க முயற்சித்தார்கள் என்று குற்றம் சாட்டி, யூ-பா-பி, யூ-தாரவாடி, யூ-லுன் ஆகிய அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இச்செய்தி பர்மாவில் பரபரப்பை உண்டுபண்ணியிருப்பதாகத் தெரிகிறது.

யூ-பா-பி என்பவர், இந்தியாவிலிருந்து பர்மாவைப் பிரிப்பதில் தீவிரமாக உழைத்தவர். இவர் போருக்குப் பின்னரும், முன்பும், அமைச்சராகப் பணியாற்றியவர்.

இரங்கூனில் சிறை வைக்கப்பட்டிருந்த இவர், இப்போது சிகிச்சைக்காக மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

தாரவாடி மாங் என்பவர் 1938-ம் ஆண்டில், சுகாதார அமைச்சராகப் பணியாற்றியவர். இவர் அமெரிக்காவில் இரசாயன எஞ்சினீயராகப் பட்டம் பெற்றவர். அரசியலிலிருந்து ஒதுங்கி வியாபாரம் செய்து வந்தார்.

யூ-லுன்என்பவர்,முன்னையசட்ட சபையின் உறுப்பினர்; யூ-சாவின் மந்திரி சபையில் சிறிது காலம் அமைச்சராகப் பணியாற்றினார். பின்னர், அவர் ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார் என்று சொல்லப்படுகிறது.

இச்சதியில் ஈடுபட்டதாகச் சொல்லப்படும் நான்காவது ஆள் பர்மிய சர்க்காரின் உயர்தர அதிகாரிகளில் ஒருவராம். இவர் இன்னும் கைது செய்யப்படவில்லை; இவர்மீது போலீஸ் கண்காணிப்பு உள்ளதாம்.

1949-ல் இந்த நால்வரும், ஜெனரல் நீ-வின் என்னும் தளகர்த்தரிடம் சென்று இராணுவப் புரட்சி செய்யத் தூண்டினார்களாம்.

பொருளாதார உதவிக்கு எண்ணெய்க் கம்பெனி ஒன்றை நாடினார்களாம்.

இதற்கிடையில் கைது செய்யப்பட்ட தலைவர்களின் வழக்கை நடத்த லண்டன் வழக்கறிஞரான பிரிட் வருவார் என்று சொல்லப்படுகிறது.

கல்லூரி மாணவர் ஆர்ப்பாட்டம்

ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி மறுக்கப்பட்டதை எதிர்த்து நடவடிக்கை

மைசூர் மகாராஜா கல்லூரியைச்சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் மைசூர் பல்கலைக் கழக அலுவலகத்தின்முன் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பரீட்சைக்குப் பணம் கட்டும் காலவரம்பை சற்று ஒத்திப் போடக் கோரியும், ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி வசதி செய்துதர மறுத்துவிட்ட 'இலவச கல்விக் குழு'வின் முடிவுகளை விசாரணை செய்யவும் கோரியே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிகிறது.

பல்கலைக் கழக வரவு—செலவுத் திட்டம் பற்றி கழக 'செனேட்' சபை விவாதித்துக்கொண்டிருந்த நேரத்தில் மாணவர்கள் தங்கள் கோரிக்கைகளை முழக்கியிருக்கின்றனர்.

'செனேட்' சபையினரின் கவனத்தைக் கவரும் வகையில் மாணவர்கள் கோஷித்திருக்கின்றனர்.

பிரதேச காங்கிரஸ் தலைவரான வீரண்ண கௌடா உட்பட பல அங்கத்தினர்கள் வெளியில் வந்து மாணவர்களைச் சாந்தப்படுத்தி அவர்களின் கோரிக்கைகளைக் கவனிப்பதாக வாக்குத் தந்த பின்பு, மாணவர்கள் அமைதியாகக் கலைந்தனர் எனக் கூறப்படுகின்றது.

மாவ்லங்கர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

மக்கள் சபையில் தோல்வி

புதுடில்லி, டிச. 19—

மக்கள் சபைத் தலைவரான மாவ்லங்கர்மீது எதிர்க் கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றுவிட்டது.

தீர்மானத்தை நிறைவேற்றிவிட ம. சோ. கட்சி, கம்யூனிஸ்டு கட்சி, ஜனசங் போன்றவற்றின் தலைவர்கள் அரும்பாடு பட்டனர் என்ற போதிலும், 'சபைத் தலைவர் இன்ன சந்தர்ப்பத்தில், இவ்வாறு பாரபட்சமாக நடந்துகொண்டார்,' என்று குறிப்பிட்டுக் காட்ட முடியாதவர்களாயிருந்தனர்.

முதலில் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதையே காங்கிரசார் விரும்பவில்லை; என்றாலும், 50 பேருக்கு மேல் விரும்பியதால் இரண்டு மணி நேரம் அந்தத் தீர்மானம் விவாதத்திற்காக ஒதுக்கப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் மாவ்லங்கரை எதிர்த்துப் போட்டியிட்ட எஸ். எஸ். மூர் என்ற பம்பாய் விவசாயிகள் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் விவாதத்தில் எதிர்க் கட்சியினர் சார்பில் 25 நிமிடங்கள் பேசியும், மாவ்லங்கர்மீது குற்றச் சாட்டு எதையும் குறிப்பிட்டுக் கூற முடியவில்லை; இதுவே, எதிர்க் கட்சியினருக்கு ஒரு 'தோல்வி'யாயிருந்தது.

ம. சோ. கட்சித் தலைவர் ஜே. பி. கிருபளானி தீர்மானத்தில் கையொப்பமிட்டிருந்தும் பேசவில்லை.

கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் ஏ. கே. கோபாலனுல்கூட பொதுப்படையான குற்றச் சாட்டுக்களைத் தான் கூறமுடிந்ததேயன்றி, சம்பவங்களைக் குறிப்பிட்டுப் பேச இயலவில்லை.

பிரதமர் நேரு, எதிர்க் கட்சியினரின் போக்கைக் கண்டு ஆத்திரப்பட்டவராய், அவர்களின் 'பொறுமையற்ற தன்மை'யைக் கடிந்து கொண்டாராம்.

மணிப்பூர் ஆலோசனைக் குழு உறுப்பினர் 'கடத்தப்பட்டார்'!

பலவந்தமாக ராஜினுமா கடிதத்தில் கையொப்பம் வாங்கப்பட்டது!

பொறுப்பாட்சிக் கோரிக்கைப் போராட்டம் வலுக்கிறது

இம்பால், டிச. 18—

மணிப்பூரில் உள்ள ஆலோசனைக் குழு ஆட்சியை எதிர்த்து தொடர்ந்து 'சத்தியாக்கிரகம்' நடைபெற்றிருக்கிறது.

பொறுப்பாட்சி கோரும் போராட்டத்தையொட்டி சுமார் 2,000 பேர் அடங்கிய மக்கள் கூட்டம் ஒன்று, ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கும் கிருஷ்ண மோஹன் சிங் என்பவரை காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து 'கடத்தி'க் கொண்டு போய், 'ஆலோசனைக் கவுன்சிலிலிருந்து விலகி விடுகிறேன்,' என்ற வாசகங்கள் கொண்ட கடிதம் ஒன்றில் கட்டாயமாகக் கையொப்பமிடுமாறு வற்புறுத்தி, கையொப்பம் வாங்கியிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

இந்தக் கூட்டத்தினரிடமிருந்து, போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல், போலீஸ் படையின் உதவியுடன் மோஹன் சிங்கைக் 'காப்பாற்றி'ஞர் எனவும் தெரிகிறது.

காங்கிரஸ் அலுவலகத்திலிருந்த தொம்பி சிங் என்ற இன்னுமொரு ஆலோசனைக் குழு அங்கத்தினரும் 'கடத்திச் செல்லப்படுவதி'னின்றும், காங்கிரஸ் ஊழியர்கள் காப்பாற்றியிருக்கின்றனர்.

இந்தச் சம்பவங்களையொட்டி, இரண்டு பெண்கள் உட்பட எட்டு 'சத்தியாக்கிரகி'களை போலீசார் கைது செய்திருக்கின்றனர் எனச் செய்திகள் கூறுகின்றன. நேற்றைய தினம் போலீசார் ஒரு கூட்டத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை கண்டிக்கும் வகையில் கடைகள் பூராவும் அடைக்கப்பட்டு 'ஹர்த்தால்' அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஜப்பான் மந்திரி சபையில் பிளவு!

பொருளாதாரக் கொள்கையில் கருத்து வேற்றுமை

ஜப்பானில் புதிதாக அமைக்கப்பட்ட மந்திரி சபையில் பொருளாதாரக் கருத்துவேற்றுமை நிலவுகிறதாம்.

இந்தக் கருத்துவேற்றுமை மந்திரி சபைக்கு ஆபத்தை விளைவிப்பதாக மாறலாம் என்று ஜப்பானியர்கள் அஞ்சுகின்றனர்.

புதிதாக பதவி ஏற்றுள்ள நிதி அமைச்சருக்கும் வர்த்தக, தொழில் அமைச்சருக்குமிடையே பலத்த கருத்து வேற்றுமை நிலவுகிறதாம்.

நிதியமைச்சர் ஹிசாடோஇசிமடா, போருக்கு பின்னர், எட்டு ஆண்டுகாலம் ஜப்பான் ரிசர்வ் பாங்கியின் கவர்னராக இருந்தார் அவர் கடின பொருளாதாரக் கொள்கை உடையவர்; பொருளாதாரக் கட்டுப்பாடுகள் மூலம் நாட்டை முன்னேற்ற வேண்டுமென்பது அவர் கருத்து.

வர்த்தக, தொழில் அமைச்சர் டான்சன் இசிபாசி, பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியவர். போருக்குப் பின்னர், அவர் மூன்றுண்டு காலம் நிதி அமைச்சராக இருந்தவர்; மிதவாத நோக்குடைய அவர், வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழுந்த போதிலும், 90 மில்லியன் ஜப்பானியர்களின் வயிற்றை நிரப்ப வேண்டுமென்று கருதுகிருர் என்று சொல்லப்படுகிறது.

மதுவிலக்கு விசாரணைக் குழு நியமனம்

தற்போது இந்தியா பூராவிலும் மதுவிலக்கு அமுல் நடைபெறுவதை பரிசீலனை செய்யவும், தேசிய அடிப்படையில் மதுவிலக்குத் திட்டத்திற்குத் தனது சிபாரிசுகளைத் தெரிவிக்கவும் திட்டக் குழு, என். என். அகர்வால் தலைமையில் ஒரு மதுவிலக்கு விசாரணைக் குழுவை நியமித்திருக்கிறது. இக்குழுவை நியமித்ததோடு மட்டுமல்லாமல் திட்டக் குழு, ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி வைத்திருக்கிறது. அத்தீர்மானம் இந்திய அரசியல் சட்டம் 47-வது ஷரத்தைக் குறிப்பிட்டு மதுவிலக்குக் கொள்கையை விளக்குவதாகவும், அது சம்பந்தமானப் பிரச்சினைகளை ஆராய்ந்து, மதுவிலக்கு அமுல் செய்யப்பட தேசீய திட்டம் ஒன்று வகுப்பதும், பொது மக்களுடைய ஆதரவைத் தேடுவதும் அதன் நோக்கமாக இருக்கிறது.

மாநில சர்க்கார்கள் மதுவிலக்கை அமுல் நடத்தும் அனுபவங்களிலிருந்து நிர்வாக, பொருளாதார, சமூக சம்பந்தமாக இருக்கும் கஷ்டங்களையும், வெற்றி பெற்றுள்ள நடவடிக்கைகளையும் மதிப்பிடுவதும், தேசிய அடிப்படையில் மதுவிலக்குத் திட்டம் பற்றி சிபாரிசு செய்வதும், இத்திட்டம், எவ்வகையில், எந்த நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதும், இது சம்பந்தப்பட்ட மற்றும் சில சிபாரிசுகளைத் தெரிவித்தல் ஆகிய இவைகளே அக்குழுவின் பரிசீலனைக்கு வரும் விஷயங்கள் எனக் கூறப்படுகிறது.

தன் கையே தனக்கு உதவி!

கோவில்பட்டி, டிச. 18—

இவ்வூரைச் சேர்ந்த சுரக்காய்ப்பட்டி கிராமத்தில் சுமார் 100 வீடுகளே உள்ளன. பள்ளிக்கூடமே இல்லாதிருந்த இந்த ஊரில் அரசாங்கம் ஒரு ஒற்றை ஆசிரியர் பள்ளியைத் துவக்கினர். ஆனால் ஊரில் ஆசிரியர் தங்குவதற்கு வீடே இல்லை. உடனே கிராம வாசிகள் ஒன்று கூடி அவர்களே பணம் வசூல் செய்து ஆயிரம் ரூபாய் பெறுமான இரண்டு வீடுகளை ஆசிரியர்களுக்காகக் கட்டித் தந்துள்ளனராம்.

'தன் கையே தனக்கு உதவி' என்ற வகையில், தங்களூர் பள்ளி ஆசிரியருக்கு தாங்களே வீடு கட்டித் தந்தது பலராலும் பாராட்டப்படுகிறது.

பிரிட்டனில் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல்?

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைமை அலுவலகம், நாடெங்கும் உள்ள தனது கிளை நிறுவனங்கள், அடுத்த ஆண்டில் பொதுத் தேர்தலில் ஈடுபட தயாராகிக்கொள்ள வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பியுள்ளதாம்.

ஐந்தாண்டு காலம் நீடிக்கக் கூடிய சர்ச்சிலின் மந்திரி சபை பதவியேற்று மூன்ருண்டுகள் தானுயிற்று என்ருலும், அடுத்த ஆண்டிலேயே பொதுத் தேர்தல் நடக்கக்கூடுமென அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

"'நாம்' எனும் பொதுமை வளர்க்க முயலுங்கள்"

"'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' எனும் உண்மையை உணர்த்துங்கள்"

கல்வித் துறைத் தலைவர் சுந்தரவடிவேலு அறிவுரை

"இங்கிலாந்தில் ஆரம்ப ஆசிரியருக்குப் பாட திட்டம் இல்லை; ஆசிரியர்களை அவ்வளவு நம்புகிருர்கள். பிள்ளைகள் பக்குவ நிலையையொட்டி, சாத்தியமான அளவு போதிக்க, நம்பிவிட்டிருக்கிருர்கள். ஆசிரியர்களும், அதற்குப் பாத்திரமாக நம்பிக்கையுடன் நடந்துகொண்டுள்ளனர்."

"வேற்றுமை சக்திகள் அகல வேண்டும்: சாதித் தொல்லைகளும் போகவேண்டும்; யார் உங்களைத் தூண்டினலும், நீங்கள், பொறுமையுடனிருங்கள்; வகுப்புகளில் சாதி வேற்றுமை மனப்பான்மையை மாணவர்களிடம் புகுத்தாதீர்; 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்,' என்ற மனப்பான்மை வளருவதற்குப் பாடுபடுங்கள்; 'நான்,' 'நீ' என்ற மனப்பான்மை அகன்று, 'நாம்' என்ற மனப்பான்மை வளர முயலுங்கள்."

—இவ்வாறு, சேலம்—இராசிபுரம் தாலூகா ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் முதலாவது மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில், சென்னை மாநில கல்வி இலாகா டைரெக்டர் திரு. என். டி சுந்தர வடிவேலு குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னர்:—

"இன்றைய நிலையில், 100-ல் 15 பேர்தான் படித்துள்ளதாகக் கணக்கு; உண்மையில், நன்கு படித்தவர்கள் இன்னும் குறைந்த விகிதத்தினரேயாவர்.

நாட்டுக்குப் பயன்பட வாழ வேண்டும்; குறைந்த சம்பளம் பெறுவதால், 'குறைந்த வேலை செய்யலாமா,' என்று நினைக்காதீர்கள். அதற்காக சின்ன மனிதர்களாக ஆகிவிடாதீர்கள். முழு மனிதனகப் பயனுள்ள வாழ்வு வாழுங்கள். அரை மனிதன், கால் மனிதனுக ஆகிவிடாதீர்கள். ஒன்றும் கிடைக்காதவர் ஆசிரியராக வந்திருக்கலாம்; அதனுல் அது தாழ்ந்ததாகிவிடாது. பலவற்றிற்கு முயற்சி செய்திருக்கலாம்; நம் தொழில் பற்றி நாம் பெருமிதம் கொள்ளலாம்; அது ஒன்றும் குறைந்ததில்லை.

ஒரு ஆசிரியர், தன் ஊழிய காலத்தில், 1000 குழந்தைகளுக்காவது பயிற்சியளிக்கின்ருர். பல ஆசிரியர்கள் வறுஸமப்பட்டிருந்தாலும் நல்ல மனம் படைத்திருக்கின்றனர்; இதில் எனக்கு நேரில் அனுபவம் உண்டு.

'சம்பளம் குறைவு' என்று, கிடைத்துள்ள வாய்ப்பைக் குறைவாக எண்ணுதீர்கள்; சம்பள உயர்வு கேளுங்கள், போராடுங்கள்!

இங்கிலாந்திலும், ஆசிரியர்களுக்கு, மற்ற தொழில்களில் கிடைக்கும் ஊதியம் கிடைக்கவில்லை. முன்பு கிடைத்ததைவிட தற்பொழுது அதிகம் கிடைப்பது உண்மை. தன்மான உணர்ச்சி மூலம் அவர்கள் பொறுப்பு குறையவில்லை. ஆகவே, ஆங்கிலேயர்களால் முடிந்தது, முயற்சி செய்தால் நமக்கும் என் முடியாது? 'முடியும்; அவர்களையும் மிஞ்சலாம்,' என்றுதான் நினைக்கிறேன்.

அந்த உணர்ச்சி உங்களிடம் வந்த காலத்தில், உங்களை ஒருவரும் அலட்சியப்படுத்த முடியாது; அகௌரவப் படுத்த முடியாது.

தவறும் குழந்தைகளை அடிக்காமல், திட்டாமல், தன்னம்பிக்கை ஊட்டி, திருத்தவேண்டும். பள்ளிக்கூடம், 'வெட்கப்படாமல் முயற்சிக்கும் கூடம்' ஆகும்.

தொழில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கூட, உத்தியோகத்திற்குத் தான் விண்ணப்பம் போடுகிருரே தவிர, தன்னம்பிக்கை கொண்டு தொழில் நடத்த முன்வருவதில்லை. அவ்விதமே, குழந்தைகளும் மனச் சோர்வடையாதபடி வளர்க்க வேண்டும்; மனம் தூய்மைப்பட வேண்டும்; செய்கையிலும் மாற்றம் காட்ட வேண்டும்.

"கல்வியில் குற்றமில்லை; முறைகளிலேதான் குற்றம் என்ற மனப்பான்மை வந்துவிட்டது. போட்டி நல்லதுதான்; ஆனால், எல்லா போட்டியும் நன்மை ஆகாது. கூட்டுறவும், நாட்டு நலமும் வளரவேண்டும். நாட்டு மக்களை நல்ல முறையில் வளர்ப்பது நம் கையில்தான் உள்ளது. இங்கிலாந்தில், நிர்ப்பயமும், சுதந்திரமும் பூர்ணமாய் உள்ளன; யார் எது கூறினுலும் சகிக்கும் பண்பு இருக்கிறது; நாணயமும், நம்பிக்கையும் பூரணமாய் உள்ளன.

புதிய தலைமுறை, நாணயத்திலே நல்ல முறையில் வளர, நீங்கள் பாடுபட வேண்டும். நமக்குள்ளிருக்கும் அவநம்பிக்கை போக வேண்டும். அசுத்தம் செய்யாமல் சுத்தமாக இருக்கும் பண்பு வளர வேண்டும். தனிச் சுத்தம், ஊர் சுத்தம், நகர் சுத்தம் வளர நீங்கள் போதிக்க வேண்டும். நல்ல பழக்கம் வளர்க்கப் பாடுபடுங்கள். அறிவு, திறமை, ஆண்மை தருவது மட்டும் அல்ல; நல்ல பழக்கவழக்கங்களை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்றும் கங்கணம் கட்டிக்கொள்ளுங்கள்."

நீர்முள்ளிக்குட்டை பஞ்சாயத்து தேர்தல்

வெற்றி பெற்றவர்களுக்குபாராட்டு

கடந்த 27 ஆண்டு காலமாக இவ்வூரில் உள்ள மக்கள், சாதி வேற்றுமை காரணமாக பிளவு பட்டுக் கிடந்தனர்.

4—12—54ல் இவ்வூரில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தேர்தலுக்கு கழகத் தோழர்கள், எதிர்க் கட்சியினரை எதிர்த்து தனிப்பட்ட முறையில் போட்டியிட்டு மிக உற்சாகமாக வேலை செய்தனர்.

இந்த நிலைமையில் தோழர்கள் பி. நாதப்பக் கவுண்டர், பேளூர் பி. சி. ஆர்., வாழபாடி பெரியசாமி, மணி, பூமலை, துரைசாமி, காரிபட்டி நாடார், ஆர். வெங்கடாசல உடையார், என். சி. மாரிமுத்து ஆகியோர் இவ்வூருக்கு வந்து, பொது மக்களைக் கூட்டி, பிளவு பட்டுக்கிடந்தவர்களை ஒன்றுபடுத்தி சமரசம் செய்தனர்.

பின்னர், பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிட்ட கழகத் தோழர்கள் வ. படகாத்துடையார் தலைவராகவும், என். வ. செல்லமுத்து கவுண்டர் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, தோழர்கள் என். எம். முத்து உடையார், என். எம். அங்கமுத்து கவுண்டர், என். வி. வெங்கட்ட கவுண்டர், பழனிமுத்து படையாச்சி, கே. அர்ச்சுனன் பகடை ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், 15—12—54ல், தோழர் என். எம். முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்களைப் பாராட்டியும், கழகத்துக்கு முதன் முதல் நன்கொடையளித்த அக்கராகரம் ரங்கசாமி உடையார் அவர்களின் வள்ளண்மையைப் பாராட்டியும் தோழர்கள் என். கே. வெங்கடாசலம், என். சி. வீரப்பன் ஆகியோர் பேசினர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 4 அன்பளிக்கப்பட்டது—பெற்றுக் கொண்டோம்—மிக்கநன்றி—பொறுப்பாளர்.

நடை பாதையில் 24,000 பேர் வதிகின்றனர்

அவர்களுக்கு வீடு கட்டித் தர ரூ. 64 லட்சம் செலவில் திட்டம்?

சென்னை நகரத் தெருக்களிலும், நடைபாதைகளிலும் குடியிருக்கிற சுமார் 6,500 குடும்பங்களுக்கு வசதிகளுடன்கூடிய வீடு கட்டித் தருவதற்காக ரூ. 65 லட்சம் செலவில் திட்டமொன்றை நகரசபைக் கமிஷனர் திரு. வி. என். சுப்பராயன், நகரசபையில் தாக்கல் செய்வார் எனத் தெரிகிறது.

பத்திரிகை நிருபர்களிடை பேசிய கமிஷனர், தாம் நியமித்த பெண் 'சர்வேயர்'கள், நகரின் நடைபாதைகளில் குடியிருப்போரின் எண்ணிக்கை பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்துள்ளதாயும், அந்த அடிப்படையிலேயே ஆண்டொன்றுக்கு ரூ. 12 லட்சம் செலவு செய்தால் 5 ஆண்டிற்குள் அந்தக் குடும்பங்கள் அத்தனைக்கும் வீடு கட்டித் தந்துவிட முடியுமெனவும், அதற்கான திட்டத்தை தாம் தயாரித்திருப்பதாயும் கூறியிருக்கிருர்.

இந்தத் திட்டத்திற்காகும் செலவில் பாதித் தொகையை மானியமாகவும், பாதித் தொகையைக் கடனுகவும் சர்க்கார் வழங்குமானுல் திட்டம் அமுல் செய்யப்படுவது சுலபம் எனவும் அவர் கூறியிருக்கிருர்.

நடை பாதையில் வசிக்கும் அந்த 6,500 குடும்பங்களில் மொத்தம் 24,000 பேர்கள் உள்ளனர் எனவும் அவர் கூறியிருக்கிருர்.

தனிப்பட்டவர் முதலீடு

சர்க்கார் கொள்கை பற்றி டி. டி. கே. விளக்கம்

"ஏழை மக்களின் சேமிப்புகளை பயன் தரும் உற்பத்தித் துறைகளில் ஈடுபடுத்துவது தான் தனிப்பட்ட ஒருவரின் முயற்சி என்று தெரியுமானுல், சர்க்கார், அதன் வளர்ச்சிக்கு எல்லாவிதமான உதவியையும் அளிக்கும்."

இவ்வாறு, மத்திய தொழில், வர்த்தக அமைச்சர் கிருஷ்ணமாச்சாரி, பம்பாயில் நடைபெற்ற சர்வதேச வர்த்தக சபையின் பிரதேச நிறுவனமான ஆசிய—கீழ்கோடி விவகார கமிஷனின் 3-வது கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"அபிவிருத்திக்குப் போதுமான பணமில்லை என்ற கவலையில், தனிப்பட்டவரின் முயற்சிக்குப் பணம் கிடைக்கச் செய்வதின் முக்கியத்தையும், அம்முயற்சி வளர்ந்தோங்குவதற்கான சூழ்நிலைகளையும் உருவாக்குவதின் அவசியத்தை சர்க்கார் கவனிக்கவில்லை," என்று பிர்லா கூறியதற்குப் பதிலளிக்கும் முறையில் கிருஷ்ணமாச்சாரி மேலும்கூறியதாவது:—

"ஏழை மக்களின் சேமிப்புகளினுல் கிடைக்கும் பணமும் தனிப்பட்ட ஒருவரின் முயற்சி எனும் விரிவானதொரு வரம்புக்குள் வருமானுல் சர்க்கார் அதை ஆட்சேபிக்காது; ஆனுல், ஏழை மகனின் நிலையை உயர்த்துவதென்ற எங்கள் (சர்க்கார்) கடமையையும் நாங்கள் நிறைவேற்ருமலிருக்க முடியாது. கையில் - ரொக்கப் பணம் வைத்திருப்பவர்கள் முதலீடு செய்யுமாறு எங்களால் (சர்க்கார்) செய்ய முடியாவிட்டால், நாங்கள் வேறெந்த இடத்திலாவது பணத்துக்கான ஏற்பாடுகள் செய்தாக வேண்டும். நாங்கள் எந்த இடத்திலிருந்து பணம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதை லேவாதேவிக்காரர்கள் முடிவு செய்யப் போவதில்லை'.

சுஹ்ரவர்த்தி - மந்திரியானர்

கராச்சி, டிச. 20—

பாகிஸ்தான் மந்திரி சபையில் சுஹ்ரவர்த்தி இன்று அங்கத்தினராக்கப்பட்டுவிட்டார்.

அவர், சட்ட இலாகா மந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அவர் சேர்ந்த காரணம்

பாகிஸ்தானில் இப்போது சட்சி சார்பற்ற மந்திரிசபை நடப்பதாகவே தான் கருதுவதினுல்தான் மந்திரிசபையில் சேர்ந்ததாகவும், எந்த கோஷ்டியின் பிரதிநிதியாகவும் தான் சேரவில்லை என்றும் சுஹ்ரவர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் கருத்து

"இந்தியாவும் - பாகிஸ்தானும் நல்லுறவுடனே இருக்க வேண்டுமென்பதுதான் தன்னுடைய சொந்தக் கருத்தும் தனது அவாமிலீக் கட்சிக் கருத்துமாகும்," என்று கூறியுள்ளார்.

அவர் நம்பிக்கை

பாகிஸ்தான் முழுவதிற்கும் பொதுத் தேர்தல் நடைபெறுவதில் காலதாமதம் ஏற்படாதென்றும், தேர்தல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அரசியல் அடிப்படையில் தான் நடைபெற வேண்டியிருக்குமெனவும், அவர் கூறியிருக்கிறார்.

சுஹ்ரவர்த்தி மேலும் நிருபர்களிடை பேசுகையில், தேர்தல்கள், அரசியல் விவகாரங்கள் நிர்வாகம் தன் கையில் இருக்குமென்றும் தெரிவித்திருக்கிறார்.

* * *

மற்றுமொருவர் மந்திரியாகிறார்

பாகிஸ்தான் தூதுவராக இங்கிலாந்திலிருந்த இப்ராகிம் ரகிமதுல்லா என்பவரும், சுஹ்ரவர்த்தி நிதி; சட்ட இலாகா மந்திரியாக்கப்பட்ட நேரத்திலேயே வர்த்தக மந்திரியாகப் பதவி யேற்றிருக்கிறார் எனத் தெரிகிறது.

சந்திப்பு எங்கே?

கராச்சி, டிச. 20—

பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலியும், இந்தியப் பிரதமர் நேருவும் அடுத்த மாதம் இந்தோனேஷியாவில் உள்ள போகார் எனும் நகரில் சந்தித்து, இருவரும் எங்கு எப்போது இந்தியா—பாகிஸ்தான் தகராறுகள் பற்றிப் பேசுவதென்பதைத் தீர்மானிப்பார்களாம்.

மனிதனை மனிதன் இழுப்பதை ஒழிக்க!

புதுடில்லி, டிச. 20—

மனிதனை, மனிதன் இழுக்கிற ரிக்ஷா தொழிலை படிப்படியாக நீக்கிவிட வேண்டுமென மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்களுக்குக் கட்டளை பிறப்பித்துள்ளதாம்.

அதே நேரத்தில், இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பல்லாயிரவர்களுக்கு வேறு வேலை தேடித்தரும் பொறுப்பையும் மாநில அரசாங்கங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் மத்திய அரசாங்கம் கூறியிருக்கிறதாம்.

இத்தகவலை மத்திய சுகாதார மந்திரி ராஜ்குமாரி அமிர்த கௌர் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

கைது செய்யலாம்

புதுடில்லி, டிச. 20—

போர்த்துகீசிய ஆதிக்கத்திலிருக்கும் பகுதிகளிலிருந்து ஆயுதந்தரித்த யாரேனும் இந்தியப் பகுதிக்குள் நுழைந்தால் அவரைக் கைது செய்து காவலில் வைக்க வேண்டுமென்றும், ஆயுதந் தாங்கியவர்கள் இந்தியப் பகுதிக்குள் நுழைவதைத் தடுக்க அவசியமானுல் பலாத்காரம் பிரயோகிக்கலாமென்றும் உத்திரவிடப்பட்டுள்ளதாக பிரதம மந்திரி நேரு மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

3 நாள் குழந்தைக்கு அம்மை நோய்

மருத்துவ உலகில் புதுமை

லண்டன், டிச. 18—

"குழந்தை பிறந்த மூன்றுவது நாள் அம்மை நோயினுல் பிடிக்கப்பட்டது,"

என்று, 'பிரிட்டிஷ் மெடிகல் ஜர்னலில்' எழுதப்பட்டுள்ள கட்டுரை ஒன்றில் செய்தி ஒன்று வெளியாகியுள்ளது.

சென்னை கிண்டி நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த டாக்டர்கள் குழு ஒன்று, இக்கட்டுரையை எழுதியிருக்கிறது.

மூன்று நாள் வயதுடைய குழந்தைக்கு அம்மை நோய் காணப்படுவது உலகில் இதுவே முதல் தடவையாம்.

குழந்தை பிறப்பதற்கு 20 நாட்களுக்கு முன்பு தாயாருக்கு அம்மை நோய் கண்டதென்றும், பின்னர், மறுமுறையும் குழந்தை பிறப்பதற்கு முன்பாக தாயார் நோயுற்றர் என்றும் கூறப்பட்டுள்ளது. முதல் தடவை தோன்றிய அம்மைக்கு, தாயாரின் உடலில் ஏற்பட்ட தடுப்பு சக்தி குழந்தைக்கும் பாதுகாப்பளித்ததாம். இரண்டாவது தடவை அம்மையினுல் பிடிக்கப்பட்டபோது, தாயாரின் உடலில் ஏற்பட்ட தடுப்பு சக்தி, குழந்தைக்குப் போதுமான அளவு போய்ச் சேரவில்லையாம்; அதனுல், குழந்தை பிறந்த மூன்றுவது நாள், அம்மையினுல் பிடிக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆனுல், நோயிலின்றும் குழந்தை பாதுகாக்கப்பட்டதாம்.

விபசாரத் தடை

விபசாரத் தடை மசோதா ஒன்றை, மக்கள் சபையில், உள்நாட்டமைச்சர் டாக்டர் கட்ஜு பிரரேபித்திருக்கிறார்.

அவர் பேசுகையில், நாடு முழுவதும் இச்சட்டம் அமுல் செய்யப்படவேண்டும் என்றும், சில மாநிலங்களில் விபசாரத் தடை சம்பந்தமாக, சில சட்டங்கள் அமுல் செய்யப்பட்டு வருவதாகவும், மாநிலத்திற்கு மாநிலம் இது மாறி வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

புதிய சட்டப்படி மாநில சர்க்காரைத் தவிர மற்ற எந்தவிதமான தனிப்பட்ட நபரோ அல்லது நிறுவனமோ 'உஷார்' விடுதிகளை நடத்த முடியாதெனவும், அப்படி நடத்த விரும்புபவர்கள் அனுமதி பெற வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

"தற்போது 'உஷார்' விடுதிகள் என்று பெயரளவில் சொல்லப்படுபவை, உண்மையில் தாசி மடங்களாக இருக்கின்றன," என்றும் மந்திரி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இச்சட்ட சம்பந்தமான வழக்குகளை நடத்த உதவி போலீஸ் சூப்பரிண்டெண்ட் பதவியிலிருக்கும் அதிகாரிகளை மாநில சர்க்கார் விசேஷ அதிகாரிகளாகப் பயன்படுத்தலாம் என்றும் டாக்டர் கட்ஜு கருத்தறிவித்திருக்கிறார்.

இந்தியாவுக்கு இராஜாங்க பாங்கி

புதுடில்லி, டிச. 20—

இன்று மக்கள் சபையில் பேசம் போது நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக், இந்தியாவுக்கு 'ஸ்டேட் பாங்கி' அமைப்பது பற்றி சர்க்கார் முடிவு செய்துள்ளது என்று கூறினர்.

இம்பீரியல் பாங்கி போன்ற ஒரு சில பாங்கிகளை ஒன்று சேர்த்து இப்புதிய பாங்கி அமைக்கப்படும் என்று தெரிகிறது.

"இம்பீரியல் பாங்கியின் மீது, இந்திய சர்க்கார், அதிகப்படி அதிகாரம் செலுத்த முடிவு செய்துள்ளது," என்று தேஷ்முக் மேலும் கூறினர்.

கழகக் கூட்டங்கள்

★

சின்னளப்பட்டி

தி. மு. கழக கட்டிடத் திறப்புவிழாவும், பொதுக்கூட்டமும்

வள்ளுவர் திடலில்

24—12—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: வி. எஸ். எஸ். மணி

பேசுவோர்:

சி. என். அண்ணுதுரை
கே. ஏ. மதியழகன்
அ. பொன்னம்பலனர்

★

திண்டுக்கல்

வ. உ. சி. திடலில்

25—12—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: அ. பொன்னம்பலனர்

பேசுவோர்:

சி. என். அண்ணுதுரை
கே. ஏ. மதியழகன்
பி. சமதர்மம்
எஸ். பி. தாண்டவன்

அன்று மாலை தோழர் கே. எம் அனிபா குழுவினரின் இன்னிசையும் நடைபெறும்.

★

இடையகோட்டை

தி. மு. கழக முதலாண்டு விழா

குமாரமுத்து படித்துரையில்

26—12—54 மாலை 4 மணிக்கு

தலைவர்: கே.எஸ். இலட்சுமிபதி. எம்.எல்.ஏ,

பேசுவோர்:

சி. என். அண்ணுதுரை
கே. ஏ. மதியழகன்
அ. பொன்னம்பலனர்
மதுரை எஸ். முத்து
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
டி. சண்முகம், ,,
சுயம்பிரகாசம், ,,
எம். பி. சுப்ரமணியம், ,,
கே. ஏ. சேனுபதி, ,,
ஏ.கோபால கவுண்டர், ,,
ஆர். ரங்கசாமி ரெட்டியார், ,,
எம். பி. மங்கலம், ,,
என். இரத்தினம், ,,

மாலை 3 மணிக்கு, மாபெரும் ஊர்வலமும், தோழர் நாகூர் அனிபா இசை விருந்தும், கிராமிய மேளம்—கிராமிய நாடகமும் நடைபெறும்.

முகவரி மாற்றம்

எஸ். எஸ். பி. லிங்கம்,
82, மெயின் ரோட்,
ராஜா அண்ணுமலைபுரம்,
சென்னை-28

முகவரி

ஆ. மணி எழிலன்,
செந்தமிழ் பாசறை,
கண்ணமங்கலம் அஞ்சல்,
வ. ஆ. மாவட்டம்.

சைப்ரசில்:

பிரிட்டிஷ் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம்!

ஒரு ஆர்ப்பாட்டக்காரர் பலி

மாணவர்களும் பங்கு பெறுகின்றனர்

நிகோசியா, டிச. 19—

"சைப்ரஸ் காலனி பிரிட்டிஷ் பிடியிலிருந்து விலகி, கிரேக்க நாட்டுடன் சேர வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் பரிசீலிக்கலாகாது," என்ற ஐ. நா.-வின் தீர்மானத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது பிரிட்டிஷ் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தென் சைப்ரஸ் துறைமுகமான லிமசால் எனுமிடத்தில் நடைபெற்றிருக்கிறது.

இராணுவத்தினர் மூன்று முறை சுட்டனர் எனத் தெரிகிறது.

ஏராளமான பேர், சம்பவத்தினையொட்டி கைது செய்யப்பட்டுள்ளனராம்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார்.

ஏராளமான மாணவர்கள் இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்து, சைப்ரசுக்கு தன்னுட்சி வேண்டும் என்ற முழக்கத்துடன் ஊர்வலமாக வந்து, அரசாங்க அலுவலகக் கட்டிடங்களின் கண்ணுடிக் கதவுகளை உடைத்தும், பிரிட்டிஷ் 'யூனியன் ஜாக்' கொடிகளை அகற்றித் தீ வைத்தும், இன்னும் இவை போன்ற செயல்களிலும் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

இன்னுமொரு இடத்தில், மாணவர்கள் கமிஷனர் அலுவலகத்தில் பறந்து கொண்டிருந்த யூனியன் ஜாக் கொடியை இறக்கிவிட்டு கிரேக்க நாட்டு கொடியை ஏற்றிப் பறக்கவிட்டனராம்.

இந்த நேரத்தில் மாணவர்கள் மீது இராணுவத்தினர் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனராம்.

ஏதென்ஸ் நகரிலும் மாணவர்கள் போலீசாருடன் மோதிக்கொண்டதின் விளைவாக அறுவர் காயமடைந்திருக்கின்றனர்.

ஏதென்ஸ் மாணவர் சங்கம் ஐ. நா.-வின் முடிவை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்துள்ளது.

கடந்த வியாழனன்று சலோனிக்கா எனுமிடத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது சேதப்பட்ட அமெரிக்க, பிரிட்டிஷ் தூதுவராலயங்களுக்குப் பழுது பார்க்குமாறு கிரேக்க அரசாங்கம் உத்திரவிட்டுள்ளதாம்.

* * *

கிளர்ச்சியின் எதிரொலி

சைப்ரசில் ஊரடங்குச் சட்டம்

அமைதியைப் பாதுகாக்க வேண்டி சைப்ரஸ் முழுமையும் ஊரடங்குச் சட்டத்தை சர்க்கார் பிறப்பித்துள்ளனர்.

"வெளியில் நடமாட வேண்டாம்" என்று மக்களை சர்க்கார் வானெலி எச்சரித்தது.

ஒரு பகுதியில் துருப்புகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமாறு நேரிட்டதாம். இதில் ஒருவர் காயமுற்றார் என்று தெரிகிறது.

பிரிட்டிஷாருக்குச் சொந்தமான பொருள்களை அழித்து ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர்கள், துருப்புகளிடம் ஐந்து தடவை கைகலந்தனர் என்று தெரிகிறது. இதுவரை 31 பேர் காயமுற்றனர் என்று தெரிகிறது.

கிரேக்கர்களுக்கும், துருக்கியர்களுக்கும் இடையே தெருச் சண்டைகள் நடைபெற்றனவாம். கிரேக்கர்கள் வாழும் பகுதியில் உள்ள கடைகள் சேதப்படுத்தப்பட்டன என்று தெரிகிறது.

கென்யா போலீஸ் அதிகாரி ராஜினுமா?

சர்க்காருடன் கருத்து வேற்றுமை

நைரோபி, டிச. 20—

கென்யா போலீஸ் கமிஷனரான ஆர்தர் யங், தனது இராஜினுமாவை கென்யா கவர்னர் பாரிங்கிடம் கொடுத்துள்ளார் என்று தெரிகிறது.

இந்த இராஜினுமாவை கவர்னர் லண்டனில் உள்ள காலனி அமைச்சர்களுக்கு அனுப்பியுள்ளாராம்.

பயங்கரவாதிகளை எதிர்க்கக் கடைபிடிக்கப்படும் போலீஸ் கொள்கையை இவர் ஒப்புக்கொள்ள மறுக்கிறாராம். சமீபத்தில் சர்க்கார் குழு ஒன்று இது பற்றிக் கூறிய சிபாரிசுகள் மீதும் இவருக்குக் கருத்துவேற்றுமையுள்ளதாம்.

'துருவங்'களிடை சமரசம்

பர்மியப் பிரதமர் முயற்சி?

செஞ்சீனுவுக்கும் — அமெரிக்காவுக்குமிடையே சமரசம் செய்வதற்கான திட்டமொன்றை தெரிவித்து, பர்மியப் பிரதமர் யூ—நூ - விரைவில் சீன, அமெரிக்க நாட்டு அதிபர்களுக்கு கடிதம் வரையப் போவதாக தெரிவித்திருக்கிறாராம்.

இலங்கையில் திராவிடர் திருநாள்

★

இலங்கையில் திராவிடர் திருநாளைக் கொண்டாடும்படி இலங்கையிலுள்ள கிளைக் கழகங்கட்கு இலங்கை தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் இரா. அதி. மணி கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்:—

"எந்த ஆண்டையும் விட, இந்த ஆண்டு பொங்கல் விழா மிகச் சிறப்பாகவும் உயர்ந்த முறையிலும் இலங்கையெங்கிலும்கொண்டாடப்படக் கிளைக் கழகங்கள் பணிபுரிய வேண்டும்.

14-1-55-லிருந்து, 23-1-55 வரை பொங்கல் வாரமாகக் கொண்டாடலாம்; அந்த வாரத்தில் ஏதாவது ஒரு நாளிலோ அல்லது இரு நாட்களிலோ பொதுக் கூட்டங்களும், கூடுமானுல் இசை நிகழ்ச்சிகளும் வைத்துக் கொள்ளலாம்.

மாணவ - மாணவிகள், கழகத் தோழர்களடங்கிய ஊர்வலங்களும், பொங்கல் பற்றிய பேச்சுப் போட்டிகளும் நடத்தி பரிசுகளும் வழங்கலாம்.

கூட்டங்களில், பொங்கல் விழாவின் அவசியம் பற்றியும், குறள் நெறி மக்களிடையே வளர வேண்டியதின் அவசியம் பற்றியும் வற்புறுத்திப் பேசப்பட வேண்டும்.

சிங்களமும், தமிழும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக இருக்க வேண்டுமென்று ஆட்சியினரை கேட்டுக்கொள்ளும் தீர்மானங்களும், நாட்டின் முக்கிய இதர தீர்மானங்களும் நிறைவேற்றப்பட வேண்டும்.

எல்லா நிகழ்ச்சிகளையும், தீர்மானங்களையும் பத்திரிகைகளுக்கும், தலைமைக் கழகத்துக்கும் அனுப்பிவைக்க வேண்டும்."

ஏஜண்டுகள் தேவை

★

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய பொறுப்பு வாய்ந்த ஏஜண்டுகள் தேவை:—

தஞ்சாவூர்
செங்கற்பட்டு
கும்பகோணம்
விருத்தாசலம்
கடலூர் என். டி.
திருவண்ணுமலை

விவரத்திற்கு:—
நிர்வாகி, 'நம் நாடு'

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணுதுரை, எம். ஏ.,

தோழர்களே! பெங்களூர் வாரீர்-1,2!